**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 554** **நாள்: 08.10.2026**

**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. த. லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள், மாதவரம் ரெட்ஹில்ஸ் நெடுஞ்சாலையில் ரூ.22.88 கோடி மதிப்பீட்டில் வி.எஸ். மணி நகரிலிருந்து புழல் உபரி கால்வாய் வரை 1160 மீட்டர் நீளத்தில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

இன்று (08.10.2026) மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. த. லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள், வார்டு-23க்குட்பட்ட மாதவரம் ரெட்ஹில்ஸ் நெடுஞ்சாலையில் ரூ.22.88 கோடி மதிப்பீட்டில் வி.எஸ். மணி நகரிலிருந்து புழல் உபரி கால்வாய் வரை 1160 மீட்டர் நீளத்தில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தப் பணிகள் முடிவுறும் நிலையில் எம்.ஆர்.எச். சாலை, பாலாஜி நகர், வெஜிடேரியன் நகர், கிருஷ்ணா நகர் பகுதிகளைச் சார்ந்த பகுதிகளில் வெள்ளப் பாதிப்பின்றி இருக்கும்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வார்டு-24க்குட்பட்ட ஸ்ரீபாலாஜி நகர், 3ஆவது பிரதான சாலை அருகில் மழைநீர் தேங்கும் பகுதியாக கண்டறியப்பட்ட தாழ்வான இடத்தில் முன்னெச்சரிக்கைப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்து, தேவையான முன்னெச்சரிக்கை நவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-31க்குட்பட்ட ரெட்டேரி வடக்கு உபரிநீர் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத்தாமரை மற்றும் கழிவுகளை அகற்றி தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு, இப்பணிகளை மேற்கொண்டு நீர் சீராகச் செல்வதைக் கண்காணித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-30ல் மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதியாக கண்டறியப்பட்ட எலிசபெத் நகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள 100 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பம்பின் செயல்பாட்டினை இயக்கி பார்த்து ஆய்வு செய்தார். இப்பகுதியில் தேங்கும் மழைநீரானது உடனடியாக இந்த மோட்டார் பம்பு மூலமாக அருகில் உள்ள 200 அடி சாலையில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கால்வாயில் வெளியேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பின்னர், கணபதி சிவா நகரில் உள்ள மோட்டார் அறை மற்றும் நீர்த்தேக்கத் தொட்டியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து. தொடர்ந்து கண்காணித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சின் சார்பில் ரெட்டேரி கரையின் அருகில் இந்த மோட்டார் அறை மற்றும் நீர் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பல்வேறு மழைநீர் கால்வாய்களின் மூலமாக சேகரமாகும் மழைநீரானது இந்த நீர்தேக்கத்தொட்டியில் சேகரிக்கப்பட்டு இங்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ள 75 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மூலம் ரெட்டேரியில் வெளியேற்றப்படுகிறது. அதிக அளவில் மழை பொழியும்போது கூடுதலாக 100 எச்.பி. மோட்டார் பம்புகள் இவ்விடத்தில் பொருத்தப்பட்டு மழைநீர் ரெட்டேரியில் வெளியேற்றப்படும்.

**இந்த ஆய்வின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாதவரம் மண்டலத்தில் வடகிழக்குப் பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் மூலமாக மாதவரம் மண்டலத்தில் பெருமளவில் மழைநீர் பாதிப்புக்குள்ளாவது தடுக்கப்படும். பெருமளவிலான மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகள் இன்னும் ஒரு வாரத்திற்குள் முடிக்கப்படும். ரெட்டேரி உபரிநீர் வெளியேறும் பகுதிகளில் ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணிகள் மற்றும் மழைநீர் வெளியேறுவதற்கு தடையாக உள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.எல். விஜய்பிரபு, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் திரு.இ.சேட்டு, திருமதி சங்கீதா பாபு, மண்டல அலுவலர் திருமதி ஸ்ரீதேவி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**